## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.221/2024

நாள்: 23 .06.2026

வா.சா. 2 – சக்ரவர்த்தி

2026–ம் ஆண்டு ஜூன் 23–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கின் தகவலை வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன். என்னுடைய மனைவி வழக்குரையில் தங்கவேலு, இரத்தினசாமி, ரெங்கசாமி ஆகியோர் பாகம் பிரித்துக்கொண்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் நான் சொன்னவாறு சொல்லவில்லை என்றாலும் சொன்னதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள 2 ½ செணட்டுக்கு ஈடாக சர்வே எண்.170/1–ல் பெற்றுக்கொண்டு தங்கவேலுவின் வாரிசுகள் கூட்டாக சேர்ந்து வாய்மொழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்ய ஒப்புதல் அளித்தார்கள் என்று முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றாலும் தங்கவேலுவின் வாரிசுகள் யார் யார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விவரத்தை என் மனைவி தாக்கல் செய்த வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. வழக்குரையில் இல்லாத சங்கதிகளை நான் என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்றால் சரியல்ல. ரூ.100–க்கு மேற்பட்ட மதிப்புடை அசையா சொத்துகளை பதிவுப்பத்திரம் இல்லாமல் உரிமை மாற்றம் செய்யமுடியாது என்றாலும்

வாய்மொழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒப்புதல் கொடுத்ததாக முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளத பொய் என்றாலும் சரியல்ல. வாய்மொழி ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்பட்ட பட்டா செல்லத்தக்கதல்ல என்றாலும் அந்த பட்டா ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. ஜோடிக்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் 23.09.2021–ல் என் மனைவின் பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தேன் என்றாலும் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி அகிலாம்பாள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.175/2014–ல் சர்வே எண்.168/15 இந்த வழக்கின் சொத்து சேரக்கப்படவில்லை என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இரத்தினசாமியின் பாகத்தை 1ம் பிரதிவாதி வாங்கியுள்ளதால் 1ம் பிரதிவாதிக்கும் இரத்தினசாமி வகையறாவுக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் இரத்தினசாமி வகையறாவை மட்டும் சேரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் என்னை சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றாலும் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் தெரியாது. நான் குடியிருக்கும் வீட்டின் பழைய சர்வே எண்.168/2 புதிய சர்வே எண்.168/15 என்றாலும் 1ம் பிரதிவாதி ரத்தினசாமியிடம் கிரயம் பெற்றுள்ள இடத்திற்கு மேல்புறமாக ½ செண்ட் இடத்தில் வீடு கட்டி குடியிருக்கிறேன் என்றாலும் அந்த இடத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புதிய சர்வே எண்.168/15–ல் தான் குடியிருக்கிறேன் என்றாலும் 23.09.2021ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் காலிமனை என்று உள்ளதாலும் வழக்குரையின் சொத்து விவரத்தில் காலி மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளதாலும் நான் குடியிருப்பதை மறைத்து காலி மனை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டுக்கு

சர்வே எண் இல்லை. சர்வே எண் இல்லாத சொத்து இருக்க முடியாது என்றாலும் நான் வழக்கிற்காக சர்வே எண் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரய மனைக்கு மேற்கு மற்றும் வடக்கு, சிமெண்ட் ரோட்டுக்கு தெற்கு, வளர்மதி மனைக்கு கிழக்கு இந்த நான்கெல்லையில் ½ செண்டில் தான் நான் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 4 செட்டில் குடியிருக்கிறேன். வழக்குரையின் சொத்து விவரத்திலும் செட்டில்மெண்ட் பத்திரத்திலும் அதிகப்படியான சொத்து விவரத்தை காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,<br>
சிறப்பு நீதிபதி எண்.2,<br>
ஜெயங்கொண்டம்.